**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**MCOP No. 598 /2022 RW2**

05.04.2025 **எ.ம.சா.2 செந்தில்குமார் சத்திய வாக்குமூலத்தின் பேரில் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை -**

எனது பெயர் செந்தில்குமார் என்பதை காட்ட அடையாள அட்டை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது பெயரில் டாடா எஸி வாகனம் உள்ளது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. விபத்து வழக்கு சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. நான் மேஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தில் சாட்சி ஏதும் சொல்லவில்லை. எதிரில் வந்த இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபரின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. விபத்து நடந்த போது அந்த இடத்தில் சுமார் எத்தனை பேர் பார்த்தார்கள் என்றால் நான் மட்டும் தான் பார்த்தேன். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் 3 நபர்களை என் வண்டியில் ஏற்றி சென்று மருத்துவமனையில் கொண்டு சேர்த்தேன். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் மணிரத்தினத்தை நானும், இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்களும் சேர்ந்து தான் டாடா ஏஸியில் ஏற்றிச் சென்று மருத்துவமனையில் அட்மிட் செய்தோம் என்று சொல்லியிருப்பது சரிதான். நான் விபத்தை நேரிலேயே பார்க்காததால் தான் முன்னுக்கு பின் முரனாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் விபத்தை 200 அடி தூரத்தில் இருந்து பார்த்தேன் என சொல்வது தவறு என்றால் சரியல்ல. நான் டாடா ஏஸி வண்டியை ஓட்டிக்கொண்டு வரும்போது ஓட்டும் வேலையை மட்டும் தான் பார்த்து வந்தேன் என்றும், விபத்தை பார்த்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. எதிரில் வந்த இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் குடிபோதையில் இருந்தார் என்று எப்படி சொல்கிறேன் என்றால் மருத்துவமனையில் அவருக்கு ஊசி போட மருத்துவர்கள் மறுத்து விட்டதாலும், மருத்துவர்கள் சொன்னது மூலமும் தெரிந்து கொண்டேன். மருத்துவர்

சொல்லி தான் தெரிந்து கொண்டேன் என்று எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் மருத்துவமனைக்கு செல்லவும் இல்லை, மருத்துவர் என்னிடம் எதுவும் சொல்லவுமில்லை என்றும், எதிர்மனுதாரர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் மணிரத்தினம் தான் ஓட்டுநர் உரிமம் இன்றி, அதிவேகமாக வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. விபத்திற்கு மணிரத்தினம் தான் காரணம் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.